ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
For Private Circulation Only
ECHOES INDIA
மார்ச் 2013 மலர் 6 இதழ் 2

# மாஸ்டரின் அறிக்கை



## ஜனவரி 2013

மாஸ்டர் காயத்ரியில் தங்கியிருந்து தனது வழக்கமான தினசரிச் செயல்களைச் செய்து வருகிறார். ஏறக்குறைய எப்போதும் மாலை சத்சங்கம் இருக்கும். அதை அவ்வப்போது மாஸ்டர் நடத்துவார். இருப்பினும் அவர், அடிக்கடி, சத்சங்கத்தை சில பிரிபெக்ட்களை கொண்டே நடத்துவார்.

ஜனவரி 4 அன்று மாஸ்டர் திரைப்படம் ஒன்றை பார்த்துக்கொண்டிருந்தார், அது நள்ளிரவு 11.30 வரை தொடர்ந்தது. மேலும் அவர் தூங்கும் மனநிலையில் இல்லை. அவர் தன் பேத்தி மாதுரி U.K. சென்றடைவதற்காக காத்திருந்தார் என்பதை அனைவரும் பின்னர் தான் உணர்ந்தனர். அதிகாலை 12.30 மணி அளவில், அவளிடம் பேசிய பிறகு மாஸ்டர் உறங்கினார்.

மாஸ்டர் மீண்டும் தனது மின் அஞ்சலை பார்வையிடும் பணியைத் துவங்கியுள்ளார். சில நாட்களில் அவர், இரண்டு மணி நேரம் வரை அதில் ஈடுபடுகிறார். அவர் '60 Years in the Wild' என்ற மூன்று பாகம் கொண்ட பிபிசி தொகுப்பை பார்த்து, அதை மிகவும் ரசித்தார். ஒரு நாள் மதிய உணவுவேளையின்போது மாஸ்டர், ஆணும்,பெண்ணும் சேர்ந்து வாழும்பிரச்சனையை பற்றி பேசினார்.திருமணம் செய்யாமல், ஆனால் குழந்தை பெற்றுக்கொண்டு, பின்னால் திருமணம் செய்ய ஒப்புவிக்க இயலாமல் இருப்பதை, பழத்தை வாங்குவதற்கு முன்பாகவே உண்பதற்கு சமப்படுத்தினார். தற்பொழுது இந்தியாவிலும் அது எவ்வாறு சாதாரணமாகி விட்டது என்பதையும் குறிப்பிட்டார்.

ஜனவரி 9, புதன்கிழமை அன்று மாஸ்டர் ஆசிரமத்திற்கு சென்று காலை 9 மணி சத்சங்கத்தை நடத்தவும் மேலும் திருமணம் செய்து வைக்கவும் திட்டமிட்டிருந்தார் இருந்தபோதிலும் அவர் நலமில்லாமல் இருந்ததால் சகோ.கமலேஷ் சத்சங்கம் நடத்தி, திருமணங்களையும் செய்துவைத்தார்.

மாஸ்டர் தொலைக்காட்சி தொடரான 'சாணக்கியா'வை பார்த்து வருகிறார். சாணக்கியரை பற்றி அவ்வளவாகத் தனக்குத் தெரியாது என்றார். அவர் அரசியலில் வல்லவராக இருந்தபோதிலும், அவரின் அதிகமான முயற்சிகள் பழிவாங்குதலை பின்புலமாக கொண்டிருப்பதாக காணப்படுகிறது என்றார். மாஸ்டர், பழிவாங்கும் எண்ணம் கொன்டிருத்தல் நல்லதல்ல என்று கூறினார்.

## ஜனவரி 14, 2013 பொங்கல்

மாஸ்டர் மிகவும் சீக்கிரமாகவே தயாராகி காயத்ரிக்கு வெளியே அமர்ந்திருந்தார். அவர், குளிர்ந்த வானிலையையும், மூடுபனியையும் கவனித்துவிட்டு, சென்னையில் குளிர்காலம் முடிவுரும் தருணமாகிவிட்டது எனக் குறிப்பிட்டார். மாஸ்டர் ஆசிரமத்தை அடைந்து, ஒலி-ஒளி மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பார்வையிடச் சென்று ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். அவர் பதிவு செய்த ஒரு உரை, சத்சங்கத்திற்கு பிறகு தியானமண்டபத்தில் ஒலிபரப்பப்பட்டது.

மாஸ்டர் 1மணி 10நிமிடங்கள் நீடித்த சத்சங்கத்தை நடத்தினார். அது முழுமையான உள்ளீர்ப்புடையதாக இருந்தது. அதன் பிறகு மாஸ்டர் ஒளிர்வதை ஒருவரால் காணமுடிந்தது. பிறகு மாஸ்டர், குடில் மறுசீரமைப்பு பணிகளை ஆய்வு செய்தார். மதிய உணவிற்கு பிறகு மாஸ்டர் காயத்ரிக்கு புறப்பட்டார்.

அந்த நாள் 'காயத்ரி'யின் ஐம்பது ஆண்டுகளை குறிப்பதாகவும் இருந்தது. அன்று மாலை காயத்ரியில் கணேஷ் குமரேஷின் நிகழ்ச்சி ஒன்று இருந்தது. மாஸ்டர் அனைத்து பாடல்களையும் ரசித்தார். மேலும், அது மிகவும் நினைவில் கொள்ளக் கூடிய தருணமாக அவருக்கு அமைந்ததாக கூறினார். அவர் முழுமையான விருந்திடுவோராக இருந்து, அனைத்து விருந்தாளிகளையும் இரவு விருந்தை உட்கொள்ளும்படி வேண்டினார். மேலும் அனைவரும் விருந்தை முடிக்கும் வரை காத்திருந்தார்.











பெரும்பகுதி இஸ்தான்புல் நகரத்தில் எடுக்கப்பட்டிருந்த ஒரு திரைப்படத்தை மாஸ்டர் பார்த்தார். அந்த நகரத்தின் மீது மாஸ்டர் பணிபுரிந்து கொண்டிருந்ததை அங்கிருந்த ஒவ்வொருவராலும் உணர முடிந்தது. அடுத்த நாள் இஸ்தான்புல்லில் இருந்து வந்திருந்த ஒரு குடும்பத்தினர், அவரிடம் துருக்கியில் உள்ள நமது மிஷனின் வளர்ச்சி குறித்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் சில புகைப்படங்களைத் தம்முடன் கொண்டு வந்திருந்தனர். முந்தைய நாள் பார்த்த திரைப்படத்தில் அவர் பார்த்தவற்றை, அந்த புகைப்படங்களுடன் தொடர்புபடுத்தி மிகுந்த ஆர்வத்துடன் மாஸ்டர் பார்த்துக் கொண்டிருந்தார்.

திருச்சி செல்வதற்கும் சில நாட்களுக்கு முன்பாக, பயணத்திற்கு முன்னர் தன்னை தயார்படுத்திக் கொள்வதற்கு ஓய்வெடுப்பதற்காக, காயத்ரிக்கு பார்வையாளர்கள் யாரும் வரவேண்டாம் என வேண்டுகோள் விடுத்திருந்தார். "மாஸ்டரைச் சந்தித்தல்" என்று தலைப்பிடப்பட்ட கருத்தரங்கத்தில் கலந்து கொள்வதற்காக, ஐரோப்பாவில் இருந்து ஏறத்தாழ 200 அப்யாசிகள் மணப்பாக்கம் வந்திருந்தனர். இதனால் மாஸ்டரது திருச்சி செல்லும் திட்டமானது ஒத்திவைக்கப்பட்டது. சத்சங்கம் நடத்துவதற்காக ஞாயிற்றுக்கிழமை அன்றும், கருத்தரங்கைத் துவக்கி வைப்பதற்காக மீண்டும் திங்கள்கிழமை அன்றும் அவர் ஆசிரமத்திற்கு வந்தார். செவ்வாய்க்கிழமை காலை விமானத்தின் மூலம் அவர் திருச்சிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

## திருச்சியில்

மாஸ்டரது வருகை அறிவிக்கப்பட்டவுடன், ஒரு குதூகலமான உணர்வானது திருச்சியைச் சூழ்ந்து கொண்டது. திருச்சி ஆசிரமத்தில் ஜனவரி 21 முதல் 25 வரை பிரிபெக்ட்டுகளுக்கான கருத்தரங்கம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. மிகவும் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்த ஆசிரம வளாகமானது, இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த 80 பார்வையாளர்களை வரவேற்றது. 22ம் தேதி அன்று மாஸ்டர் திருச்சியை வந்தடைந்தார். 23ம் தேதி அன்று சத்சங்கம் நடத்தினார். பிரிபெக்ட்டுகளின் பணி குறித்தும், எவ்வாறு சிட்டிங்குகள் கொடுப்பது என்பது பற்றியும் மாஸ்டர் பேசினார். 26ம் தேதி சத்சங்கம் நடத்தியதற்குப் பிறகு, சகோதரத்துவம், ஒத்திசைந்து வாழ்தல் மற்றும் தீவிரமாகத் தியானம் செய்வதற்கான தருணம் போன்றவை குறித்தும் உரையாற்றினார்.

27ம் தேதி அன்று, ஏறத்தாழ 1500 அப்யாசிகள் கலந்து கொண்ட சத்சங்கத்தை மாஸ்டர் நடத்தினார்.



## தஞ்சாவூரில் ஒரு சிறப்பு வாய்ந்த நாள்

12.57 ஏக்கர் நிலத்தை மிஷனிற்காக பதிவு செய்தும், மீதமுள்ள நிலத்தை அப்யாசிகளுக்கு வீட்டுமனைகளுக்காக ஒதுக்கியும் ஆக மொத்தம் 38.87 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை தஞ்சாவூர் மைய அப்யாசிகள் பெற்றிருந்தனர். தியானக்கூடம், மாஸ்டர் குடில், சமையலறைக்கூடம், ஒரு சிறிய தங்குமிடம், குளியலறை மற்றும் கழிப்பிடங்கள் என அனைத்தும் தற்காலிகமாகக் கட்டமைக்கப்பட்டிருந்தன. மாஸ்டர் இந்த மையத்திற்கு வருகை புரிவதற்கு மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவரது பயணத்தில் ஏற்பட்ட சில




கட்டுப்பாடுகளாலும், அதன்பிறகு அவரது உடல்நலக் குறைவாலும் சில நேரங்களில் இது முடியாமல் போனது.

இப்பொழுது ஜனவரி 30ம் தேதி காலை 8.30 மணிக்கெல்லாம் திருச்சியிலிருந்து அவர் மகிழ்ச்சியுடன் வந்து சேர்ந்தார். தஞ்சாவூர் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்த கணத்தில் இருந்து, அவர் தன்னுடைய குழந்தைப் பருவத்து சம்பவங்களையும், தன்னுடைய முன்னோர்களது நிகழ்வுகளையும் நினைவு கூர்ந்து கொண்டிருந்தார். காலை உணவிற்குப் பிறகு அவர் தியானக்கூடத்திற்கு நடந்து சென்று, அங்கு சுமார் 50 நிமிடங்களுக்கு சத்சங்கம் நடத்தினார். சகோ. லிங்குசாமி அவர்கள் (பிரபல திரைப்பட இயக்குனர்) உளைச்சல் மிகுந்த திரைப்படத் துறைக்கு மத்தியில் தன்னுடைய சமன்படுத்தப்பட்ட வாழ்க்கைக்கு சகஜ மார்க்கமானது, தனக்கு எவ்வாறு உதவிகரமானதாக இருக்கின்றது என்பதை தமிழில் விவரித்துப் பேசினார்.

அதன்பிறகு மாஸ்டர் தமிழில் பேசினார். அவருடைய உடல்நலக் குறைவானது, பாபூஜி மகராஜிடம் இருந்து தினந்தோறும் ஆசீர்வதிக்கப்பட்ட அருட்செய்திகளை (ஒளி







உலகத்தில் இருந்து மென்குரல்கள்) படிப்பவர் அனைவருக்கும் பலன் தரக்கூடிய வகையில் பெற்றுத் தருகின்றது என்று கூறினார்.

மாஸ்டர் குடியிருப்பிலிருந்து தியானக்கூடத்திற்கு நடந்து செல்ல முடிவு செய்து அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான ஆச்சரியத்தை ஏற்படுத்தினார். சத்சங்கத்திற்கு பிறகு உரையாற்றிவிட்டு குடியிருப்பிற்கு நடந்து சென்றார். ஓய்வெடுப்பதற்கு பதிலாக வெளியே அமர்ந்து மீண்டும் ஒன்றரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். முந்தைய நாட்களைப் போலவே கேள்விகளுக்கு பதிலளித்துக் கொண்டும் ஒரு இளம்பெண்ணின் பாடல்களைக் கேட்டுக் கொண்டும் சில அப்யாசிகளிடமிருந்து பரிசுகளைப் பெற்றுக்கொண்டும் இருந்தார். அந்தப்பொழுது அப்படியே நீண்டு கொண்டிருந்ததால், இறுதியில், அப்யாசிகளே மாஸ்டரை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி வேண்டிக்கொண்டனர்.

மாஸ்டர் அங்கே தங்கியிருந்தபோது ஆசிரம இடத்தின் நில வரைபடத்தை பார்வையிட்டு தியானக்கூடத்திற்கான இடத்தை தெரிவு செய்தார். மதிய உணவிற்குப்பின் சில தன்னார்வ தொண்டர்களை சந்தித்து பிறகு மதியம் 2.30 மணியளவில் திருச்சி கிளம்புவற்கு முன் ஆசிரம இடத்தைச் சுற்றிப் பார்த்தார். அவரது வருகைக்குப்பிறகு குதூகலமான சூழ்நிலையை அனைவராலும் உணர முடிந்தது.

## சனிக்கிழமை பிப்ரவரி 2, 2013

லாலாஜி மகராஜ் அவர்களின் பிறந்த நாள் விழா அன்று மாஸ்டர் சத்சங்கம் நடத்த ஆசிரமத்திற்கு வந்தார். பிரதான வாயிலிலிருந்து தியானக் கூடம் வரையிலான வழியில், ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டே வந்தார். 1000க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்து கொண்ட சத்சங்கத்தை நடத்தியபின், இரண்டு திருமணங்களை நடத்தி வைத்தார். பிறகு, புதிதாக பெறப்பட்ட மென்குரல்



அருட்செய்தியை, ஆங்கிலத்தில் சகோ. கிருஷ்ணா வாசித்தார். பிறகு அதே அருட்செய்தி ரஷ்ய மற்றும் பிரெஞ்சு மொழிகளிலும் படிக்கப்பட்டது.இந்த செய்தி பெறப்படும் மொழியைப் பற்றிப் பேசுகையில்,அந்த அதிர்வெண்ணுடன் இசைந்திருக்கும் வரை, செய்தியை எவர் வேண்டுமானாலும் பெறலாம் என்றும்,அவ்வாறு பெறப்படும் செய்தியானது, இதயத்தின் மொழியில் இருக்கும் என்றும் மாஸ்டர் கூறினார். அச்செய்தி, சிறப்பு வாய்ந்த நம் மாஸ்டர்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களின் முக்கியத்துவத்தையும் அப்யாசிகளின் மீது அவை ஏற்படுத்தும் விளைவுகளைப் பற்றியும் வலியுறுத்தியது.

மாஸ்டர் "சத்யோதயம்" ஒலிக்குறுந்தகட்டின் முதல் பிரதியை வெளியிட்டார். பிறகு ஜானகி தோட்டத்திற்குத் திரும்பினார்.

குடிலை அடைந்த பிறகு, மாஸ்டர் அன்றைய சத்சங்கத்தைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார். "இன்றைய சத்சங்கம் தனிச்சிறப்பு வாய்ந்தது" என்று கூறிய போது, மாஸ்டரிடம் பிரகாசம் ஏற்பட்டதைக் காணமுடிந்தது.

மாலையில் சகோ. கமலேஷ் அவர்கள் அனைத்து வெளிநாட்டு அப்யாசிகளையும் சகோ.ஷஷாங்க் அவர்களின் புல்லாங்குழல் இசைநிகழ்ச்சிக்கும், ஜானகி தோட்டத்தில் இரவு உணவிற்கும் அழைத்திருந்தார். 100 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் அங்கே குழுமியிருந்தனர். மாஸ்டர் சிறிது களைப்பின் காரணமாக படுக்கை அறையிலிருந்தே 90 நிமிட ஈர்ப்புமிக்க இசைநிகழ்ச்சியைக் கேட்டார். நிகழ்ச்சிக்குப் பிறகு இசைக்கலைஞர்களைச் சந்தித்து அவர்களுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

பிப்ரவரி 3, ஞாயிற்றுக்கிழமை, மாஸ்டர் ஒரு குறு சத்சங்கத்தை நடத்திவிட்டு, உடல் சோர்வின் காரணமாக உரையாற்ற இயலாது என்று கூறினார். மணப்பாக்கத்திலிருந்து ஒரு நாளைக்காக வந்திருந்த ஐரோப்பிய அப்யாசிகள் அனைவரையும் ஜானகி தோட்டத்திற்கு மதிய உணவிற்கு வருமாறு அழைத்தபோது அனைவரின் கண்களிலும் கண்ணீர் நிரம்பியிருந்தது. மாஸ்டர் வழக்கம் போல, அவர்கள் அனைவரும் சரியான நேரத்திற்கு திரும்பிச் செல்வதையும் உறுதி செய்து கொண்டார்.

சிறிது உடல் நலக்குறைவு காரணமாக மாலையில் மாஸ்டருக்குச் சில சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. மாஸ்டர், வலி மற்றும் வேதனையைப்பற்றி மீண்டும் கூறி, அவற்றை ஒருவர் புன்னகையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பேசிக்கொண்டிருந்தார். மாஸ்டரைப் பார்க்கும் போது வலியில் அவர் காணப்பட்டாலும் அவர் கூறியவாறு புன்னகையுடன் இருந்தார்.

அந்த வார இறுதிக்குப் பிறகு திருச்சி ஆசிரமம் முழுவதும் வெறுமையாக இருந்தது.

சுமார் 40 ரஷ்ய அப்யாசிகள் வந்திருந்தனர். மாஸ்டர் அவர்களை குடிலுக்கு அழைத்து அவர்களுக்கு சிட்டிங் கொடுத்தார். அவர்களுடன் சிறிது நேரம் செலவழித்தார்.

மாஸ்டர் வெயிலில் அமர்ந்து இருந்தபோது, சைனா மற்றும் துருக்கியில் இருந்து வந்த சில அப்யாசிகள் மாஸ்டருடன் அமர்ந்தனர். வெயில் மிகவும் கடுமையாக மாறிய போது மாஸ்டர்



வெளிப்புரத்தாழ்வாரத்தில் உள்ள ஊஞ்சலில் அமர்ந்தார். அதிக நேரம் அமர்ந்து இருந்தது, சிட்டிங்குகள் கொடுத்தது, உரையாடியது போன்ற காரணங்களால் சிறிது களைப்புடன் காணப்பட்டார். டாக்டர் அவரை ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். பின்னர் பாபுஜியைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். திடீரென அவருள் சக்தி பாய்வதை ஒருவரால் காணமுடிந்தது. மாஸ்டரின் பேச்சினைக் கேட்டுக் கொண்டிருந்தது, அவரைச் சுற்றி இருந்த ஒவ்வொருவருக்கும் ஒரு பொன்னான நேரமாக அமைந்தது. மாஸ்டரின் பேச்சில் இருந்து சில விஷயங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. "கடவுள் நமக்கு அன்பளிப்புகளுடன் சில துன்பங்களையும் சேர்த்து கொடுக்கின்றார். நம்முடைய அன்பளிப்புகளைப் பயன்படுத்தி இந்த துன்பங்களை வெற்றிக்கொள்வது நமது வேலை." "முன்னதாகவே சிந்திக்காமல் இருப்பதுதான் முன்னேற்றம் அடைந்த மனதின் தனிச்சிறப்புவாய்ந்த பண்பு. நிகழும் கணத்தில் அது மிகத்துல்லியமாக செயல்படும். படித்த அறிவாற்றல் மிக்க மனதுதான் முன்கூட்டியே சிந்திப்பது, திட்டமிடுவது போன்றவற்றை செய்யும்."

மாலையில் மாஸ்டர் மிகவும் களைப்புடனும் வலியுடனும் இருந்தார். அவர் சில சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டி இருந்தது. இரவு உணவுக்குப்பின்னர் ஐரோப்பாவில் இருந்துவந்த சில அப்யாசிகள் புறப்பட்டார்கள். அவர்களை மாஸ்டர் சந்திக்க சம்மதித்தார். அவர்கள் அனைவரும் கண்ணீருடன் உள்ளே வந்தனர். அவருடைய பிரசன்னத்தில் அவர்கள் முழுமையாக மனம் உருகி போனார்கள். ஒரு வயதான பெண் அவருடைய பேத்தி மாஸ்டருக்கு தன்னுடைய வாழ்த்துக்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மாஸ்டர் அவருடைய பேத்திக்கு ஒரு அன்பளிப்பு வழங்கினார். அந்தப் பெண் உணர்ச்சிப் பெருக்கில் கண்ணீர் சிந்தினார். மற்றவர்களும் மனம் நெகிழ்ந்தனர். மாஸ்டர் காட்டிய அத்தகைய அன்பு, இரக்கம் மற்றும் மென்மை ஆகியவை நாம் கட்டாயம் முயற்சி செய்து பின்பற்ற வேண்டிய விஷயங்கள்.

உடல் நலத்தில் பின்னடைவு ஏற்பட்ட காரணத்தினால் மாஸ்டர் ஒரு நாள் முன்னதாகவே சென்னை திரும்ப முடிவு செய்தார். செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு மாஸ்டர் திருச்சியை விட்டு சாலை வழியாக கிளம்பினார். வழியில் விழுப்புரத்தில் பயணத்தை நிறுத்தினார்.

விழுப்புரம் அப்யாசிகளுக்கு மாஸ்டரின் பயணத்திட்டம் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அவர்கள் மாஸ்டரை வரவேற்கத் தேவையான ஏற்பாடுகளை செய்திருந்தனர். மாஸ்டர் பிற்பகல் 12.30 மணிக்கு விழுப்புரம் வந்து சேர்ந்தார். அவர் 30 நிமிடங்கள் சத்சங்கம் நடத்தினார். பின்னர் அப்யாசிகளுடன் உரையாடிவிட்டு மதிய உணவு உண்டார். ஆசிரமத்திற்கு "தபோ நிதி" (Tapo Nidi) என்று பெயர் சூட்டினார். மாஸ்டர் பிற்பகல் 3.00 மணிக்கு சென்னைக்குப் புறப்பட்டார். சென்னையில் மாஸ்டர் நேரடியாக மருத்துவ பரிசோதனைக்குச் சென்றார். பயணம் காரணமாக மிகவும் களைப்புடன் இருந்ததால் விரைவிலேயே ஓய்வெடுக்கச்சென்றார்.

காயத்திரியில் ஒரு நாள் பிற்பகல் நேரம் ஐரோப்பாவில் இருந்து வந்த நெடுங் காலமாக சகஜ மார்க்கத்தில் இருக்கின்ற அப்யாசி இளைஞர்களிடம் மாஸ்டர் பேசிக்கொண்டு இருந்தார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆப்பிளைக் கொடுத்துவிட்டு, ஒருமுறை பாபுஜி அவரிடம் சில நாட்கள் உண்ணாவிரதம் இருக்கும்படி கூறியதாகவும் பின்னர் ஒரு ஆப்பிளை கொடுத்ததாகவும் கூறினார். மாஸ்டர் கத்தியைத் தேடியபோது பாபுஜி அவரிடம் கத்தி எதற்காக எனக் கேட்டார். மாஸ்டர் மற்றவர்களுக்கு பகிர்ந்து அளிக்கத் தேவைப்படுகிறது என்றார். "மற்றவர்களுக்கு எப்படி கொடுக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். இதை நான் உனக்காகக் கொடுத்தேன் எனவே நீயே சாப்பிடலாம்" என அவரிடம் பாபுஜி கூறினார். இதன் மூலம் மாஸ்டர், அவர்களுக்கு அளித்த ஆப்பிள் மற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு அல்ல என்றும், அவர்கள் ஒவ்வொருவரும் சாப்பிடுவதற்கே என்ற செய்தியினை அனைவருக்கும் தெரிவித்தார்.

## ரஷ்யா மற்றும் தென் அமெரிக்கா அப்யாசிகளுக்கான கருத்தரங்கு

தொடர்ந்து மூன்றாம் ஆண்டாக ரஷ்ய மொழி பேசும் அப்யாசிகள் இந்தியா வந்து கொண்டிருக்கின்றனர். ரஷ்யாவில் இருந்து 750 அப்யாசிகள் மற்றும் தென் அமெரிக்காவில் இருந்து150 அப்யாசிகள் மணப்பாக்கத்தில் ஒன்று திரண்டனர். கருத்தரங்கின் முதல் நாளான பிப்ரவரி 9 ம் தேதி மாஸ்டர் குடிலினை புதுப்பிக்கும் பணியினை சரிபார்த்த போது



தூசியினால் மிகவும் பாதிக்கப் பட்டார். எனவே அப்யாசிகளை தியானக் கூடத்தில் இருந்து Dorm A க்கு வரும்படி கேட்டுக்கொண்டார். அங்கு அவர் சுருக்கமான சத்சங்கம் நடத்தினார். அதன் பின்னர் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு உடனடியாக காயத்திரிக்கு கிளம்பினார்.

கருத்தரங்குக்கு கொடுக்கப்பட்டத் தலைப்பு "அன்பு மற்றும் சரணாகதி" என்பதாகும். அனைவரும் ஒன்று சேர்ந்து பல் வேறு செயல்பாடுகளில் பங்கு கொண்ட போதிலும் சுத்திகரிப்புப் பணி தனிப்பட்ட முறையில் தன்னிச்சையாக செயல்புரிந்ததை காண முடிந்தது. ஆசிரமம் முழுமையும் மாஸ்டரின் அன்பால் போர்த்தப்பட்டு இருந்தது. மாஸ்டரின் தீர்க்கதரிசனம் குறித்தும் அதற்கு ஏற்றவாறு ஒருவரது வாழ்க்கையினை எவ்வாறு வழி நடத்தி செல்ல வேண்டும் என்பது குறித்தும் ஆராயும்படி அப்யாசிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

சகோதரர்கள் கம்லேஷ் படேல், ஏ.பி. துரை, சி. ராஜகோபாலன், பி.ஆர். கிருஷ்ணா, பில் வேகாட், சமீர் சிங், மற்றும் என்.எஸ். நாகராஜா ஆகியோர் பேசிய இனிமையான எழுச்சியூட்டும் விதத்தில் அமைந்த பேச்சுகளில் இருந்து ஏராளமான விஷயங்களை பங்குகொண்டவர்கள் பெற்றனர். பேச்சுகள் பல் வேறு தலைப்புகளின் கீழ் இருந்தன: பல்வேறு தலைப்புகள்: அன்பு மற்றும் சரணாகதி, தெய்வீக கோட்பாடுகள், சேவையே வாழ்க்கை, சகஜ மார்க்கத்தின் இயல்பு மற்றும் என் வாழ்க்கையில் சகஜ மார்க்கம். ஒவ்வொரு நாள் மதியமும், காலையில் வழங்கப்பட்ட உரையில் கேட்டவற்றை பகிர்ந்து கொண்டு, அனைத்தையும் பிரதிபலிக்கும் வகையில், குழுநிகழ்வுகளை உதவியாளர்கள் நடத்தினர். இரு வேறு

பகுதிகளிலிருந்து வந்திருந்த பங்கேற்பாளர்கள், மிக விரைவிலேயே இணைந்து, சில கலாச்சாரங்கள் இணைந்த செயல் திட்டமாக அது பிரதிபலித்தது. இரண்டு கண்டங்களின், இளைஞர்களும் இணைந்து, ஒரு பாடலை பதிவு செய்து, மாஸ்டருக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

பிப்ரவரி 17, கருத்தரங்கின் கடைசி நாளன்று, மாஸ்டர் சத்சங்கம் வழங்கி, அனைத்து பங்கேற்பாளர்களையும் மதிய உணவருந்த அழைப்பு விடுத்தார். அது அவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற விசேஷ அன்பளிப்பாக அவர்களுக்கு இருந்தது. மாஸ்டருக்கு, சிறிய கலாச்சார நிகழ்ச்சி வழங்கப்பட்டது. அது பல்வேறு மொழிகளின் பாடல்களையும் மற்றும் ரஷ்யாவின் நாட்டுப்புற நடனத்தை உள்ளடக்கியதாகவும் இருந்தது.

மாஸ்டர், இந்த பிரபஞ்சம் முடிவில்லாத ஆரம்பத்தை கொண்டிருக்கிறது என கூறி, மீண்டும் தனது விவேகத்தைப் பகிர்ந்து கொண்டார். அனைவரையும் ஊக்கப்படுத்தும் வகையில், சமீபத்திய ஒளி உலகிலிருந்து வரும் மென்குரல்களிருந்து மேற்கோள் கூறி, ஏற்கனவே ஒரு சில சகஜ மார்க்க அப்யாசிகள், இந்த வாழ்க்கையிலேயே உயர்ந்தபட்ச இலட்சியத்தை அடைந்துவிட்டனர் என்று கூறினார். அது அன்பை வளர்த்துக் கொண்டு, சரணாகதி அடையும் ஆன்மீக குணநலன்களை வளர்த்துக் கொண்டால், அனைவரும் அந்த லட்சியத்தை அடைய வாய்ப்பு உள்ளது என்ற நம்பிக்கையை கொண்டு வந்தது.

மாஸ்டர் பிரிபெக்ட்களை உருவாக்குவதில் முழுவதுமாக தன்னை ஈடுபடுத்திகொண்டுள்ளார். அந்த கருத்தரங்கு நடைபெற்று கொண்டிருந்த தருணத்தில், ஸ்காலர்ஷிப் பயிற்சி நிகழ்ச்சியும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதன் விளைவாக, மாஸ்டர், 36 பிரிபெக்ட்களை இரண்டு வாரங்களுக்கும் குறைவான சமயத்தில் தயார் செய்ய வேண்டி இருந்தது. மாஸ்டர் ஒரு நாளில் மூன்று பிரிபெக்ட்களுக்கு சிட்டிங் அளித்து வருகிறார். இது அவருடைய பலத்தை பெருமளவில் வற்றச் செய்கிறது.

## பிப்ரவரி 15 வெள்ளிக்கிழமை 2013 வசந்த பஞ்சமி

மாஸ்டர் காலையில் பார்ப்பதற்கு பலவீனமடைந்தும், களைப்படைந்தும் காணப்பட்டார். ஆனாலும், முன்கூட்டியே தயாராகியிருந்தார். அவர் ஆசிரமத்திற்கு சென்று காலை சத்சங்கம் வழங்கினார். அதன் பின்னர், கனமான மழை ஆரம்பித்தது. அந்த புனிதமான நாளை நினைவுபடுத்தும் விதமாகவும், லாலாஜி மகராஜ் பூமிக்கு வந்ததற்கான காரணத்தையும் கூறி, மாஸ்டர் உரையாற்றினார். சத்சங்கம் தொடங்குவதற்கு முன்பு, நமக்கு மழை வரும் என்று தெரியாது. ஆனால், அது நடந்தது. மழை வரவேற்கப்படுகிறது, ஏனெனில் இது போன்ற தருணங்களில் அது புனிதமாக கருதப்படுகிறது.

அதன் பிறகு, மாஸ்டர் கார்டன் ஆப் ஹார்ட்ஸ்'ல் உள்ள, அவருக்கென்று தயார் செய்யப்பட்டிருந்த சகோ. சத்பீரின் குடியிருப்பை திறந்து வைத்து, ஞாயிறு வரை அங்கேயே தங்க முடிவு செய்தார். சிட்டிங் வழங்குவதில் மாஸ்டர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். அவருடைய குரல் கரகரப்பானதாக இருந்தது. உடல் பலவீனமடைந்திருந்த பொழுதும் அவருடைய பணி நிற்கவில்லை. ஞாயிறன்று காலை சத்சங்கத்தை வழங்கினார். அது 1 மணி 20 நிமிடம் வரை நீடித்தது. அதன் பின்பு தரைதள கூடத்திற்கு சென்று, தென் அமெரிக்கா அப்யாசிகள் மற்றும் ஸ்காலர்ஷிப் பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களுடன் காலை உணவை உண்டார். பிறகு மாஸ்டர் மீண்டும் சகோ. சத்பீர் வீட்டிற்கே திரும்பி சென்றார். மாஸ்டர் களைப்படைந்து இருந்த பொழுதிலும், தொடர்ந்து சிட்டிங் வழங்கி, தன்னுடைய பணியினை முடித்தார். ஒரு அப்யாசி மாஸ்டரிடம், ஏன் இது போன்று அதிகமான வேலைகளை உருவாக்கிக் கொண்டு தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறார் என கேட்டார். அதற்கு மாஸ்டர் 'நான் உடல்நிலை சரியில்லாத பொழுது அது பரவாயில்லை, ஆனால் இப்பொழுது நான் நலமாக உள்ளேன். நான் கண்டிப்பாக என்னுடைய கடமையை செய்தாக



வேண்டும். என்னுடைய கடமைகளில் பிரிபெக்ட்களுக்கு சிட்டிங் வழங்குவதும் ஒன்று' என்று கூறினார்.

மாஸ்டரின் பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது. அது எப்பொழுதும் முடிவடையாது. அவருடைய உடல்நலம் தொடர்ந்து நலமாக இருக்கவும், வலிமையுடையவராக இருக்கவும், எப்பொழுதும் போல பிரகாசித்து ஒளி வீச, நாம் அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

## புதிய வெளியீடுகள்



சகஜ மார்க் மென்டரிங்ஸ் ஆங்கிலம்



ஃபெய்த் ஆங்கிலம்



லவ் அண்ட் டெத் ஆங்கிலம்



ரியாலிடி அட் டாண்-ஆடியோ புத்தகம் - ஆங்கிலம்.



ரிலிஜன் அண்ட் ஸ்பிரிசுவாலிடி ஆங்கிலம்



நினைவுகளின் பாதையில் பாகம் 1 தமிழ்



ஸ்பைடர்ஸ் வெப் - 1 ஆங்கிலம்



மெசேஜஸ் யுனிவர்சல் 2 ஹிந்தி



ஹார்ட் ஸ்பீக் 2006 ஹிந்தி

# பூஜ்ய லாலாஜி மகராஜின்140வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்

## வடக்கு

குர்காவ், உத்திர பிரதேசத்திலுள்ள அலஹாபாத், பாலியா, கான்பூர், லால்கஞ், லக்னோ, கோலா கோகரன்னாத் போன்ற பல மையங்களில் மிகுந்த உள்ளார்வத்துடனும் விருப்பத்துடனும் பிறந்த நாளை கொண்டாட ஏற்பாடு செய்திருந்தனர். மண்டலம் 10ஐ சேர்ந்த சண்டிகர், சோன்பத், பட்டியாலா, பாவானி ஆகிய மையங்களிலும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மூன்று நாட்களுமே நிறைய அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

## கிழக்கு

கொல்கத்தா, சிலிகுரி மற்றும் கரக்பூரில் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அருகிலுள்ள மையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகளை வரவேற்கும் இடமாகவும் அமைந்தன. நிகழ்ச்சியில் உரைகள், உள்ளார்ந்து ஈடுபடுதல் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. இது சகஜ மார்க்கம் பற்றி நன்கு ஆழமாக புரிந்து கொள்ளும் தருணமாக அமைந்தது.

## தெற்கு

ஆந்திர பிரதேசத்தை சேர்ந்த கர்னூல் மற்றும் விஜயவாடா மையங்களில் மூன்று நாள் கூட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குழு கலந்துரையாடல், படத்தொகுப்புரை, கேள்வி-பதில் மற்றும் வீடியோ ஆகியவை கலந்து கொண்டவர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஏதுவாக இருந்தன. கர்நாடகாவை சேர்ந்த பெங்களூரு, கோலார், மங்களூர், சென்னப்பட்னா, குல்பர்கா, ஹுப்ளி, பீதர் மற்றும் ராய்ச்சூர் ஆகிய மையங்களில் விழா ஏற்பாடு செய்யப்பட்டு, அருகிலிருந்த மையங்களிலிருந்தும் நிறைய அப்யாசிகள் கலந்து கொண்டனர். குழு கலந்துரையாடல் மற்றும் உரைகள் மட்டுமின்றி கட்டுரைப் போட்டிக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கேரளாவை சேர்ந்த திருவனந்தபுரம், ஆலுவா மற்றும் பய்யனூர் மையங்களில் கொண்டாடப்பட்டது. தமிழ் நாட்டைச் சேர்ந்த மதுரையில் ஏறத்தாழ 200 அப்யாசிகள் விழாவில் கலந்து கொண்டனர்.

## மேற்கு

நாட்டின் மேற்கு பகுதிகளான குஜராத்தைச் சேர்ந்த அகமதாபாத், மகராஷ்ட்ராவைச் சேர்ந்த நாக்பூர், சோலாபூர் மற்றும் மும்பை மற்றும் ராஜஸ்தானைச் சேர்ந்த அல்வர் மற்றும் ஜோத்பூரிலும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

> "மகிழ்ச்சி என்பது வெளியில் இல்லை. நம் மனதை விட்டு வெளி வந்து, நம் இயற்பண்பில் ஒருநிலைப்படுத்த கவனம் செலுத்துவதில்தான், மகிழ்ச்சி உள்ளது. இந்த ரகசியம் அறிந்த எவரும் மகிழ்ச்சியை வெளியில் தேட வேண்டிய அவசியமில்லை."
>
> -- பூஜ்ய லாலாஜி மகராஜ்


அலுவா


பிகானிர்


மங்களூர்


குல்பர்கா


ஹுப்ளி


பில்வாரா


அகமதாபாத்


-சென்னபட்னா


மும்பை


மிர்ஜாபூர்


கான்பூர்


நாக்பூர்


விஜயவாடா


அலகாபாத்


புல்காவ்



கர்னூல்


வாரணாசி


லக்னௌ


கொல்கத்தா


பெங்களூரு

# கருத்தரங்குகள்

## மண்டலக் கூட்டம் - கொல்கத்தா



ஜனவரி 5 மற்றும் 6ம் தேதிகளில், மேற்கு வங்கத்தின் பல மையங்களிலிருந்து சுமார் 70அப்யாசிகள், ஆசிரமத்தில் ஒன்று கூடினர். இந்த மண்டலத்தில் இதுவரை கொல்கத்தா, சிலிகுரி ஆகிய இரண்டே ஆசிரமங்கள் உள்ளதால், இத்தகைய கூட்டங்கள், வருகை தரும் அப்யாசிகளுக்கு, ஆன்மீகச் சூழலை உணர்ந்து, மகிழ ஒரு வாய்ப்பை அளிக்கின்றன. காங்க்டாக்கில் உள்ள மூன்றாவது ஆசிரமக் கட்டிட வேலை முடியும் நிலையில் உள்ளது.

சத்சங்கத்திற்குப் பின், சகோ.மகேஷ் பரத்வாஜ், மற்றும் சகோ. ஜேசல் மேத்தா ஆகியோரால் சகஜ மார்க்கத்தின் அடிப்படை பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன. பின்னர், சகோ. சரத் ஜாவர் 'தியானம்' பற்றியும், சகோதரி லீனாதவே 'சுத்திகரிப்பு' பற்றியும் நிகழ்வுகள் நடத்தினர். பகல் உணவுக்குப்பின், துர்க்காபூரைச் சேர்ந்த சகோ. பரிமள் ஜனா, 'பிரார்த்தனை' பற்றியும், கரக்பூரைச் சேர்ந்த சகோதரி சந்திரகாந்தா அரோரா 'நாட் குறிப்பு எழுதுதல்' பற்றிய சுவாரசியமான தொகுப்பையும் வழங்கினர்.

கொல்கத்தாவைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட அப்யாசிகள், இரவில் ஆசிரமத்திலேயே தங்கினர். மறுநாள் காலை சத்சங்கத்திற்குப்பின், சகோ. அஜய் பட்டர், குறிக்கோள் பற்றி முனைப்புடன் உழைப்பது குறித்து வலியுறுத்தினார். இவ்விரண்டு நாள் கருத்தரங்கின் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு அப்யாசிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அனைவரும், இனிய நினைவுகளுடனும், மாஸ்டர் மீதான அன்பினால் ஒருமைபட்ட இதயங்களுடனும் திருப்பிச் சென்றனர்.





## புத்தகவெளியீட்டு பணிமுகாம், ஹூப்ளி

ஜனவரி 19 - 20 தேதிகளில், ஹூப்ளி மையத்தில், பெங்களூரின் சகோ. வெங்கட் ராவ் மற்றும் அவரது குழுவினர்கள், ஒரு நிகழ்ச்சியை நடத்தினர். ஹூப்ளி, சிர்சி, கடக், நவ்நகர், கரூர், ரானெபென்னூர், தார்வார், தாவண்கெரே மற்றும் பெல்காம் ஆகிய இடங்களிலிருந்து சுமார் 45 பேர் பங்கேற்றனர். 19ம் தேதியன்று, சகோ. வெங்கட், 'சேவை' பற்றிப் பேசினார். தலைப்புகள் பற்றித் தெளிவு படுத்தும் மாஸ்டரின் உரைகளின் வீடியோத்துண்டுகள் திரையிடப்பட்டன. பங்கேற்றவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, பல கருத்துக்கள் பற்றிய சிறு நடிப்புக் காட்சிகள் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். விற்பனை முறைகள் விளக்கப்பட்டன. இரண்டாம் நாள்,சகஜ மார்க்க நூல்களைப் படிப்பதன் முக்கியத்துவம் பற்றிக் கூறப்பட்டது.காலை 6 மணிக்கு தன்னார்வத் தொண்டர்கள், ஒரு புத்தகக் கடை அமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். புத்தகக் கடை அமைக்கும் போதும், விற்பனையின் போதும், தொண்டர்களின் முகங்களில் மிகுந்த உற்சாகம் தென்பட்டது. வியப்புக்குரிய வகையில், விற்பனை வரவு, ரூ.48000 ஆக இருந்தது. மாலை 5 மணிக்கு சத்சங்கம், மற்றும் நிகழ்ச்சியைப் பற்றிய பின்கருத்து ஆகியவற்றுடன் பணிமுகாம் முடிவடைந்தது.

## அபேதோன்புரா, உத்திரப்பிரதேசம்

பிப்ரவரி 17ம் தேதி, அபேதோன்புராவின் ஒரு பள்ளிக்கூடக் கட்டிடத்தில், நிர்வாக ஊழியர்கள்,தலைமை ஆசிரியர், பள்ளி மாணவர்கள், உள்ளூர் அப்யாசிகள் உள்ளிட்ட, சுமார் 150 ,பேர்களுக்கான கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியை, சகோ. சுபாஷ் சந்திரா ஒருங்கிணைத்தார்.

சகோ.R.S. இந்தோலியா, சகஜ மார்க்கத்தை அறிமுகப்படுத்தி, மனித பரிணாமத்தில் தியானத்தின் பங்கு குறித்து விளக்கினார். நவீன வாழ்க்கையில் சகஜ மார்க்கம் என்பது பற்றி, சகோ. G.S. கில் பேசினார். ஒரு கேள்விக்கான பதிலில் அவர், தியானத்தினால் நாம் ஒருமுகப்படுத்தலை அடையலாம் என்றும், ஆனால் அதுவே தியானத்தின் குறிக்கோள் அல்ல என்றும் விளக்கினார்.

சகோதரி உஷா கில், மதமும் ஆன்மீகமும் என்பது பற்றி உரையாற்றினார். அதன் பிறகு, வினா- விடை நிகழ்ச்சி நடைபெற்றது. பங்கேற்றவர்கள், சகஜ மார்க்கத் தத்துவம் பற்றிய நூல்களை வாங்கியதுடன், கூட்ட முடிவில், உணவும் உண்டு களித்தனர்.

# கட்டுரைப் போட்டி சான்றிதழ் வழங்குதல்

அனைத்திந்திய கட்டுரைப்போட்டி 2012-ல் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி இந்தியாவின் பல்வேறு மையங்களில் நடைபெற்றது.

பிப்ரவரி 3அன்று, திருப்பூர் செட்டிபாளையம் ஆசிரமத்தில் சகோதரர் N. பிரகாஷ், மண்டலப்பொறுப்பாளர் சகோதரர் T.V. விஸ்வநாத ராவ் மற்றும் திருப்பூர் மையப்பொறுப்பாளர் சகோதரர் S.ரவி சுப்பையன் ஆகியவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சி பிப்ரவரி 3-அன்று குல்பர்காவிலும், பிப்ரவரி 10-அன்று ஹுப்ளியிலும் நடைபெற்றது. ஹுப்ளி நிகழ்ச்சியில், தார்வாடு மாவட்ட DDPI திரு. ஸ்ரீவர்தன் அவர்களும், பெல்லாரியில் ASM பெண்கள் கல்லூரி முதல்வர் Dr.தேஜஸ் மூர்த்தி அவர்களும், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். பிதர் மற்றும் ராய்ச்சூரில், பிப்ரவரி3ம் தேதி இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கர்நாடக தென்மண்டலத்திற்கான இந்நிகழ்ச்சி பிப்ரவரி10-ம் தேதி பெங்களூர் மையத்தில் சகோதரி சீதா குஞ்சிபாதம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு வட மண்டலம் இந்நிகழ்ச்சியை திருச்சியில் நடத்தியது. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் Athma Hospital and Research Private Ltd. -ன் இயக்குனர் மற்றும் தலைவர் Dr.K. ராமாகிருஷ்ணன் ஆவார். மொரதாபாத் மையத்தில் 17-பிப்ரவரி அன்று இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மும்பை மற்றும் நாசிக் மையங்களுக்கான நிகழ்ச்சி பன்வேல் BMA-இல், பிப்ரவரி 10-அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சிக்கு இந்திய நாட்டின் வெளிநாடு வர்த்தகத்தின் கூடுதல் இயக்குனர் Dr. கவிதா குப்தா (IAS) தலைமை தாங்கினார். சகோதரி அனுராதா மற்றும் சகோதரர் சஞ்சய் பாட்டியா இதன் சிறப்பு விருந்தினர்கள் ஆவர்.

கொல்கத்தா BMA-இல் பம்பாய் மற்றும் கொல்கத்தாவிற்கான உயர்நீதி மன்ற முதன்மை நீதிபதியாக பணியாற்றி ஓய்வுபெற்ற நீதிபதி சித்ததோஷ் முகர்ஜி வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது தோன்றிய ஆலோசனைகள் மற்றும் எண்ணங்களை தத்தம் வாழ்க்கையில் மாணவர்கள் கடைபிடிப்பதே இந்நிகழ்ச்சியை அர்த்தமுள்ளதாக்கும் என்று சகோதரர் அஜய் பட்டர் எடுத்துரைத்தார்.

சிலிகுரி, டார்ஜிலிங் மற்றும் காங்டாக் பகுதிகளைச் சேர்ந்த விருந்தினர்கள் 27 பிப்ரவரி-அன்று சிலிகுரியில் கூடினர். ஞான் ஜோதி கல்லூரியின் முதல்வர் மற்றும் UNESCO-வின் ஆலோசகருமான பேராசிரியர் ஜயராமன் சுரேஷ் இதன் சிறப்பு விருந்தினர் ஆவார்.
































## கர்னூல் ஆசிரமம் நிலப்பதிவு

SRCMன் இணைச் செயலாளர் சகோ. A.P. துரை அவர்கள், கர்னூலில் ஆசிரமத்திற்காக 10 ஏக்கர் நிலமும் அப்யாசி குடியிருப்பிற்காக 30 ஏக்கர் சேர்ந்து அமைந்திருக்கும் நிலத்தைப் பதிவு செய்வதற்காக டிசம்பர் 27ஆம் தேதி வந்திருந்தார். சத்சங்கத்திற்குப் பிறகு அவர் கர்னூல் எல்லையிலிருந்து சுமார் 13 கி.மீ, தொலைவில், பஸ்திபாடு கிராமத்தின் எல்லையில் உள்ள புது ஆசிரமத்திற்குப் புறப்பட்டார். "மாஸ்டரை எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாக வைத்திருப்பது எவ்வாறு?" என்ற கலந்துரையாடலில் அவர் கலந்து கொண்டார். கருத்துரைகளின் பின்,மனிதரிடையே உண்மையான சகோதரத்துவத்தை ஏற்படுத்த, நாம் நமது வேற்றுமைகளையும், தனித்தன்மைகளையும் உதறி விட வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசினார். நமது ஆசிரமங்களை அதிக பட்சமாக பயன்படுத்திக்கொள்வதன் மூலம் மாஸ்டரை உண்மையிலேயே மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள முடியும் என்று அவர் ஆலோசனை கூறினார். மதிய உணவிற்குப் பிறகு, கேள்வி பதில் பகுதியில் சகஜ மார்க்க பயிற்சி பற்றிய விளக்கங்கள் தரப்பட்டன.

மாலை சத்சங்கத்திற்குப் பிறகு ஆசிரியர்களுக்காக ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் 60 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். ஒரு சிலர் நந்தியால் மற்றும் நந்திகோட்கூர் போன்ற மிகத் தொலைவிலிருக்கும் இடங்களிலிருந்தும் கூட வந்திருந்தனர்.

டிசம்பர் மாதம் 28ஆம் தேதி சத்சங்கத்திற்குப் பிறகு விற்பனைப் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. அந்தக் குழுவினர் 200 அப்யாசிகள் கூடியிருந்த கட்டிட மனைக்குச் சென்றனர். சில இளைய அப்யாசிகள் உரையாற்றுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டனர். அதன் பிறகு மையப் பொறுப்பாளர் சகோ. ரவீந்திரநாத்தும், மண்டலப் பொறுப்பாளர் சகோ.கங்காதரும்,வேறு சிலரும் பேசினர். அப்யாசி காலனி வேகமாக வளர்வதற்கும், ஆசிரமத்தினருகே ஒரு சமுதாயம் உருவாவதற்கும் மாஸ்டரின் வழிகாட்டுதல்களை தெரிவித்தார். சத்சங்கத்துடன் அந்த நிகழ்வு முடிவிற்கு வந்தது.



## சோலாப்பூர் ஆசிரமம், மகராஷ்ட்ரா

டிசம்பர் மாதம் 30ஆம் தேதி, மாஸ்டர் நேரடி ஒலி ஒளி தொகுப்பின் மூலமாக சோலாப்பூரில் தியான மண்டபத்தைத் துவக்கி வைத்தார். சோலாப்பூர் ஆசிரமம் நகரத்திலிருந்து 5 கி.மீ. தொலைவேயுள்ள அக்கல்கோட் சாலையில் உள்ள 1.5 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. ஏறத்தாழ 3,500 சதுர அடி கொண்ட தியான மண்டபத்தில் 850 அப்யாசிகள் வரை அமர முடியும். வேப்ப மரமும் அரச மரமும் சேர்ந்து சுமார் 500 வகையான பல்வேறு மரங்கள் சுற்றுச்சூழலுக்கு ஒரு பசுமைத் தன்மையைக் கொடுத்து மாஸ்டரை வெகுவாக மகிழ்வுறச் செய்தன. மாஸ்டர் ஒலி ஒளிக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஆசிரமத்தைப் பற்றி விளக்கமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். மாஸ்டர் 23 வருடங்களுக்கு முன்னால் சோலாப்பூருக்கு வந்திருந்த போது, தொலைபேசி டவர் வரை நடந்து சென்று தொலைபேசி அலுவலகத்திலிருந்து, சென்னையில் இருந்த குடும்பத்தினருடன் தொலைபேசி மூலம் பேசியதை நினைவு கூர்ந்தார். ஆசிரம நிலம் அந்த இடத்திலிருந்து மிகச் சரியாக அரை கி.மீ. தொலைவில் உள்ளது. அந்த ஒலி, ஒளிக் காட்சியைப் பார்த்த பிறகு, மாஸ்டர் அந்த ஆசிரமத்தை பூஜைக்குரிய பாபூஜி மகராஜுக்கு அர்ப்பணித்தார். இந்த மகிழ்ச்சியான தருணத்தில் அங்கே கூடியிருந்த ஒரு சில அப்யாசிகளுக்கு மாஸ்டர் பிரசாதம் வழங்கினார்.

## மொரதாபாத்

மொராதாபாத் ஆசிரமத்தில் ஜனவரி 27ஆம் தேதி, சகோ. ராஜ் கிஷோரால் 48 அப்யாசிகளுக்காக ஒரு பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சிறு சிறு குழுக்களைக் கொண்டு நான்கு பிரிவுகளாக நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முதல் பிரிவில் சுய சோதனை மற்றும் உள்ளார்ந்த விழிப்புணர்வு பற்றிய முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. தலைப்பை விளக்கும் விதத்தில் மாஸ்டரின் கருத்துக் கோர்வைகளும், போதனைகளும் முக்கியமானதாக எடுத்துரைக்கப்பட்டன. இரண்டாவது பிரிவில் தியானம் சம்பந்தமான எல்லா விஷயங்களும், விளக்கங்களும் பார்வைக் கருவிகள் மூலமாக (visual aids) வழங்கப்பட்டன. இதில் ஒளியுலகத்திலிருந்து வரும் செய்தித் தொகுப்புக்களிலிருந்து அந்த தலைப்புக்கு ஏதுவான சில செய்திகளும் சேர்க்கப்பட்டிருந்தன.

மூன்றாவது பிரிவு குழுவாக வேலை செய்வதில் கவனம் செலுத்தும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது. அப்யாசிகள் இரண்டிரண்டு பேராகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு அனுபவரீதியாக கற்றுக்கொள்ளும் விதத்தில் குழுவாக செயலாற்றுவது எவ்வாறு என்பது கற்பிக்கபபட்டது.ஒரு சிறு தேனீர் இடைவேளைக்குப் பிறகு, இறுதிப் பிரிவு, ஒரு ஒலி, ஒளிக் காட்சியைக் கொண்டதாக அமைந்தது. அதன் பின்னர் அதைப்பற்றிய உள்ளார்ந்த ஆழ்ந்த சிந்தனை தொடர்ந்தது. நிகழ்ச்சியின் இறுதியில், பங்கு பெற்றோர் அனைவரும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்ததோடு, தங்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.




## கேரள பயணம்

இணைச்செயலாளர். சகோ. A.P. துரை கேரளாவில் பயணம் மேற்கொண்டு, பல இடங்களில், குறிப்பாக கல்விச்சாலைகளில் வரவேற்புக்கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடத்திவைத்தார். திருவனந்தபுரம் வந்த அவர், ஜனவரி 17 மற்றும் ஜனவரி 18ம் தேதிகளில் சைனிக் பள்ளியிலும், பல்கலைக்கழகக்கல்லூரியிலும் உரையாற்றினார். ஜனவரி 19ம் தேதி அத்திங்கள், மற்றும் கொல்லத்தில் உரையாற்றினார். ஜனவரி 20ம் தேதி பத்தனம்திட்டா, செங்கனூர் மாவட்டங்களில் உரையாற்றினார். 21ம் தேதி கோட்டயத்தில் KSEB, மகாத்மாகாந்தி பல்கலைக்கழகம், குமாரநெல்லூர் மேல்நிலைப்பள்ளி முதலியவற்றில் கருத்தரங்கு நடைபெற்றது. மாலையில் கொச்சியிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாசிரமத்தில் கருத்தரங்கு நடைபெற்றது. ஜனவரி 22ம் தேதி காலை அவர், அலுவா ஆசிரம அப்யாசிகளுடன் கலந்துரையாடினார். அதன்பின் NSS மேல்நிலைப்பள்ளி (பரக்கடவு), ஸ்ரீநாராயாண அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்,(கருமாலூர்) மற்றும் வித்யாதிராஜவித்யா பவன் மேல்நிலைபள்ளி (அலுவா) முதலிய இடங்களில் கருத்தரங்கு நடத்தினார்.

ஜனவரி 23ம் தேதி காலையில் லோபெலியா மேல்நிலைப்பள்ளியில் (நாயரம்பலம்) கருத்தரங்கு நடைபெற்றது. திருச்சூர் அப்யாசிகளுடன் மாலையிலும், ஜனவரி24ம் தேதி காலையில் இளைஞர்களுடனும் அவர் கலந்துரையாடினார். அம்பல்லூரில் பேசியபின் அவர் பாலக்காட்டிற்கு வந்து, மாலையில் வரவேற்புக்கூட்டம் நடத்தினார். ஜனவரி 25ம் தேதி மலப்புரம், கோழிக்கோடு, மற்றும் வடகரா மையங்களிலும் வரவேற்புக்கூட்டம் நிகழ்த்தப்பட்டது. ஜனவரி27ம் தேதி பையனூரில் கடைசி வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது.

இக்கருத்தரங்குகளில் அவர், குடும்ப வாழ்க்கையில் இருப்பினும், ஆன்மீகப்பயிற்சி செய்யும் முக்கியத்துவத்தைப்பற்றியும், நற்பண்புகள் செறிந்த வாழ்க்கை வாழவேண்டிய அவசியத்தைப்பற்றியும், இக்காலத்திய மனிதன் தன் சம்ஸ்காரங்களிலிருந்து விடுபட சகஜ மார்க்கம் எவ்விதம் உதவுகிறது என்பதைப்பற்றியும், மதம் மற்றும் ஆன்மீகத்தின் வித்தியாசங்களைப்பற்றியும், கடவுளைப் பற்றிய எண்ணம் என்பது பற்றியும், நற்பண்புகள் செறிந்த சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியரின் பங்களிப்பு பற்றியும் விவரித்துக்கூறினார். அப்யாசிகளுடனும் அவர் கலந்துரையாடினார். அப்யாசிகள், தங்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் பெற இது ஊக்கமளித்தது. ஜனவரி 28ம் தேதி மாலையில் அவர் பையனூரிலிருந்து சென்னைக்கு புறப்பட்டுச்சென்றார்.

## திருச்சி

திருச்சி, சூரியூரில் அமைந்திருக்கும் பாரதிதாசன் பல்கலைகழகத்தில், பிப்ரவரி 4ம் தேதியன்று ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தப்பட்டது. பல துறைகளின் முதுநிலை மாணவர்கள், ஆராய்ச்சி நிபுணர்கள், தொழில் நுட்ப அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் முதலானோர் அடங்கிய 60 பேர் இதில் பங்கேற்றனர்.

Ms.அன்னா ஜாய்ஸி அனைவரையும் வரவேற்றபின், SRCM ன் உப தலைவர் சகோ. கம்லேஷ் படேலை அறிமுகம் செய்து வைத்தார். சகோ. கம்லேஷ் படேல், தியானத்தின் முக்கியத்துவத்தைப்பற்றியும், அதில் பொதிந்துள்ள அறிவியலைப்பற்றியும் விவரித்துக்கூறினார். தன் உரையின் பின், இதில் பங்கேற்ற பலருடன் கலந்தாய்வு செய்தார். மிஷனில் இணைந்து கொள்ள பலர் ஆர்வம் காட்டியுள்ளனர்.

பிப்ரவரி 12ம் தேதியன்று, திருச்சி பாரதிதாசன் பல்கலைகழகத்தின் பயிரியல் துறையின் அரங்கத்தில் ஒரு வரவேற்பு கூட்டம் நடந்தது. அதில், கடல் வாழ் உயிரின தொழில் நுட்ப , கடல் சார் அறிவியல் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அடங்கிய சுமார் 50 பேர் கலந்து கொண்டனர். திருச்சி மையப்பொறுப்பாளர் சகோ. T.S. ரகுராம் உரையாற்றினர். மாணவர்கள் , அவருடன் கலந்துரையாடி, மிஷனைப்பற்றிய தெளிவு பெற்றனர். பலர் மிஷனில் சேர்ந்து அனுபவம் பெற ஆர்வம் காட்டினர்

## கோலா கோகரன்நாத், உத்திர பிரதேசம்

உத்திரபிரதேசம், கோலா கோகரன்நாத் மையத்தில் ஜனவரி 20ம் தேதியன்று பல்வேறு பள்ளிகள், கல்லூரிகளிலிருந்து சுமார்110 ஆசிரியர்கள், மண்டலப்பொறுப்பாளர் சகோ.பிரபாத் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு பணிமுகாமில் கலந்து கொண்டனர். சகோதரி. சுஜாதா, ’சுயமையப்படுத்துதல் : அதன் கோட்பாடும் செயல் முறையும் ’என்பதைப்பற்றியும், சகோ. பங்கஜ்’ நவீன சமுதாயத்தில் ஆசிரியரின் பங்கு’ என்பதைப்பற்றியும் சகோ. ஹேம்ராஜ் ’இக்காலத்திய மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றின் தீர்வுகளும்’ என்பதைப்பற்றியும் உரையாற்றினர். ஆசிரியர்கள், தங்கள் அனுபவங்களை பார்வையாளர்களுடன் பகிர்ந்து கொண்டனர். இப்பணிமுகாம் சிறப்பாக நடைபெற்றதில், 40 தன்னார்வத் தொண்டர்களின் பங்களிப்பு உதவியாக இருந்தது.




## குஜராத் - மண்டல சந்திப்பு (மண்டலம் 6A & 6B)

சகோதரர்.சி.ராஜகோபாலன் ப்ரிபெக்டுகள் மற்றும் முக்கிய செயலர்களை சந்திப்பதற்க்காக அகமதாபாத் நகருக்கு வந்தார். அகமதாபாத் மற்றும் காந்தி நகர் மையங்களைச் சேர்ந்த ப்ரிபெக்டுகள் சந்திப்பின் போது, ப்ரிபெக்டுக்களின் தினசரி பயிற்சி மற்றும் சகோதர உணர்வினை வளர்ப்பதின் முக்கியத்தினை வற்புறுத்தினார். அவர்களை அருகில் உள்ள துணை மையங்களுக்கு சென்று, அங்குள்ள அப்யாசிகளை மிஷன் பணிகளில் ஈடுபட உற்சாகப்படுத்தமாறு கூறினார்.

ஜனவரி 25ம்தேதி அன்று அவர், 6A மண்டலத்தைச் சேர்ந்த மெஹ்சனா, பலான்புர், ஹிம்மர்நகர், ஜாம்நகர், புஜ், மற்றும் ராஜ்கோட் மையங்களைச் சேர்ந்த ப்ரிபெக்டுகளை சந்தித்தார்.பின்பு, துணை மையங்களின் ஒருங்கிணைப்பாளர்களைச் சந்தித்தார். மறுநாள் மண்டலம் 6A & 6B சேர்ந்த ப்ரிபெக்டுகளுடன் கூட்டங்கள் மற்றும், 'சாதனா மற்றும் ப்ரிபெக்டுகளின் பங்கு' பற்றிய கேள்வி-பதில் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

27ம்தேதி அன்று அவர் 'சாதனாவின் அடிப்படைகள்' மற்றும் 'சகஜ மார்க்கத்தின் அறிமுகம்' பற்றிப் பேசினார். நவ்சாரி, பரோடா, பரூச், ஆங்கிலேச்வர் மற்றும் செலம்பா மையங்களின் ப்ரிபெக்டுகளை சந்தித்தார்.

மாஸ்டரின் பிரசன்னத்தை அந்த மூன்று நாட்களில் அனைவரும் உணர்ந்தனர். அவர்கள் சகோ.ராஜகோபாலுக்கு நன்றி தெரிவித்ததுடன் மிஷனின் வளர்ச்சிக்கு தங்களை மென்மேலும் அர்ப்பணிக்க உறுதி பூண்டனர்.

## சத்கோல் ஆசிரமம், உத்தராகாண்ட்

டிசம்பர் மாதம் 30 மற்றும் 31ம் தேதி, உத்தராகாண்டைச் சேர்ந்த 40 ப்ரிபெக்டுகள், சகோதரிகள் சவ்வீ, பூனம் பபர், விம்லா ஷியொரோன் மற்றும் சகோதரர் ஜிக்னேஷ் ஆகியோரால் நடத்தப்பெற்ற இரண்டு நாள் ப்ரிபெக்டு வளர்ச்சிக்கான முகாமில் கலந்து கொண்டனர்.

மாஸ்டரின் பூரண பிரசன்னம் அங்கே தொடர்ந்து இருந்ததினால் இதயங்கள் மலர்ந்ததுடன், சகோதரத்துவம் வளர்ந்ததோடல்லாமல், சிறந்த அப்யாசிகளாகவும், மாஸ்டரின் திருப்திக்காக உழைப்பதற்காகவும் அனைவரும் உறுதிபூண்டனர்.அவர்களை செம்மைப்படுத்த முகாமின் ஒவ்வொரு பகுதி முடிவிலும் நடைமுறைப் பயிற்சிகள், நடத்தப்பட்டன. அங்கு காண்பிக்கப்பட்ட பாபூஜியின் மென்குரல் அருளுரைகள், மற்றும் மாஸ்டரின் உரைகள் அவர்களை அமைதிப்படுத்தி ஆழ்ந்து சிந்திக்க வைத்து, குறிக்கோளில் ஆர்வம் மற்றும் உற்சாகத்தை ஏற்படுத்தியதுடன், ஒரு பிரிபெக்டின் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

## பிரிபெக்ட் கருத்தரங்கு, திருச்சி.

ஜனவரி 21ம்தேதி முதல் 25ம்தேதி வரை சகோ.சந்தோஷ் ஸ்ரீநிவாசன் அவர்களால் பிரிபெக்ட் கருத்தரங்கு திருச்சியில் நடத்தப்பட்டது. 63 இந்திய பிரிபெக்ட்களும், சில வெளிநாட்டு பிரிபெக்ட்களும் கலந்து கொண்ட இந்த கருத்தரங்கில் ஒவ்வொரு அம்சத்திலும் மாஸ்டருடனான தொடர்பு இருந்தது.தனக்கும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அப்யாசிகளுக்கும் ஒரு வலுவான அடித்தளத்தை உருவாக்குவதில் ஒரு ப்ரிபெக்டின் பங்கு பற்றியும், ப்ரிபெக்டின் அத்தியாவசிய அணுகுமுறை மற்றும் அப்யாசிகளின் பயிற்சிபற்றியும் தெளிவுபடுத்துவதுமே இந்த கருத்தரங்கின் நோக்கம் ஆகும்.

மாஸ்டரின் 22ம்தேதி வருகையுடன், இந்த கருத்தரங்கு, தன்னாய்வுகள், பேச்சுக்கள், குழு கலந்தாய்வுகள் எனவும், அன்றாடப்பயிற்சி மற்றும் சத்சங்கங்கள் எனவும் திட்டமிட்டபடி நடைபெற்றது. மாஸ்டர், 23ம்தேதி சத்சங்கம் நடத்திய பின், ப்ரிபெக்டுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப்பற்றி பேசினார். தினமும் சத்சங்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. 24ம் தேதியின் முக்கிய கவனம், சிட்டிங்குகள் கொடுக்கும் போது, மாஸ்டருடன் எவ்வாறு இணைப்பு ஏற்படுத்திக்கொள்வது என்பதாக இருந்தது.

25ம்தேதி அன்று சகோ. கமலேஷ் படேல் சத்சங்கம் நடத்தி, பிரிபெக்ட்டு பணியின் பல்வேறு அம்சங்களைப் பற்றிப் பேசினார். அன்று மாலை, சகஜமார்க்கத்தை ஒருவரால் எப்படி நன்றாக புரிந்து கொள்ள முடியும் என்பதைப் பற்றி சகோ.கிருஷ்ணா பேசிய பின்னர், கேள்வி-பதில் நிகழ்ச்சி நடைபெற்றது. 26ம்தேதி மாஸ்டரின் சத்சங்கம் மற்றும் உரையுடன் இக்கருத்தரங்கு நிறைவுற்றது. இதில், கலந்துகொண்ட அனைவரும், தினமும் மாஸ்டருடன் மாலைப்பொழுதை செலவிட்டதுடன், இரவு உணவை ஜானகி பண்ணையில் உட்கொண்டனர். இந்த கருத்தரங்கு ஒவ்வொருவரின் சொந்த அனுபவத்தை ஆழப்படுத்தியது. தங்கள் எடுத்து கொண்ட பணிகளில், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வழிமுறைகளில் மென்மேலும் கவனமாக ஈடுபட, புதுப்பிக்கப்பட்ட ஆற்றலுடன் அனைவரும் திரும்பிச் சென்றனர்.





# இளைஞர் செயல்பாடுகள்

## நாச்சிபாளையம் ஆசிரமம், கோயம்புத்தூர்



டிசம்பர் 29 மற்றும் 30-ம் தேதிகளில் கோயம்புத்தூர் நாச்சிபாளையம் ஆசிரமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சியில் கோயம்புத்தூர், பொள்ளாச்சி மற்றும் பழனியிலிருந்து வந்திருந்த 30 இளைஞர்கள் பங்குபெற்றனர். இந்நிகழ்ச்சி சத்சங்கத்துடன் துவங்கியது. அதைத் தொடர்ந்து, பங்கேற்பாளர்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ள வாய்ப்பளித்த அறிமுகப் பகுதி நடைபெற்றது. இலட்சியம், உலகளாவிய பார்வை, பயிற்சியின்பால் கொண்ட மனப்பான்மை, மற்றும் ஒற்றுமையும் சகோதரத்துவமும் ஆகிய தலைப்புகளின் மீதான பகுதிகள், அகத்தாய்வு செய்வதாகவும் கருத்துப் பரிமாற்றம் நிறைந்த குழுக் கலந்துரையாடல்களாகவும் விளங்கின. அணி சேர்க்கும் கேளிக்கைகளும் பாடல்களும், பங்கேற்பாளர்களை ஒரே குடும்பமாக இணைப்பதற்கும் அவர்களின் சகோதரத்துவ மனப்பாங்கை ஊக்கப்படுத்தவும் உதவின.

'சேவையே ஆன்மீக முன்னேற்றத்திற்கான திறவுகோல்' என்ற தலைப்பின் மீதான ஒரு பகுதி மண்டல பொறுப்பாளர் சகோ. விஸ்வநாத ராவ் அவர்களால் கையாளப்பட்டது. CREST- பற்றிய ஒரு பகுதி, இளைஞர்களை அங்கு நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஊக்கப்படுத்தியது. இரண்டாம் நாள் நிகழ்ச்சி, ஒளியுலகிலிருந்து வந்த பாபூஜியின் செய்திக்கூறுகள், மாஸ்டரின் உரைகள் மற்றும் இளைஞர்களுக்கான ஊக்கமூட்டும் பிற ஒளிப்படங்கள் ஆகியனவற்றைக் கொண்டிருந்தது.

## இளைஞர் கருத்தரங்கம், பன்வெல் ஆசிரமம், மும்பை

ஜனவரி 26 மற்றும் 27-ம் தேதிகளில், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் மற்றும் குஜராத்திலிருந்து வந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், மும்பையிலுள்ள பன்வெல் ஆசிரமத்தில் ஒன்று கூடினர். 'மாஸ்டரின் தீர்க்கதரிசனத்தை நோக்கி பணியாற்றுதல்' என்பதே இதன் மையக் கருத்தாக இருந்தது. மேலும், 'தீர்க்கதரிசிகளாக ஆவது' என்ற மாஸ்டரின் உரையினால் ஊக்கமூட்டப்பெற்ற இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ஒத்திசைவுடன் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர்.

NASA-வின் உயிர் பிழைத்திருத்தல் பந்தயம் போன்ற செயல்பாடுகள், ஒன்றுசேர்ந்து பணியாற்றுவதற்கு தேவையான பண்புகளை எடுத்துக்காட்டியது. CREST நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட, மற்றும் சிற்றோய்வு மையங்களுக்கு (retreat centers) சென்று வந்த இளைஞர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொண்டு, மற்றவர்களையும் அதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளத் தூண்டினர்.

## பெங்களூரு

ஜனவரி 18 முதல் 20-ம் தேதி வரை பெங்களூரிலுள்ள CREST மையம் 82 இளம் பங்கேற்பாளர்களுக்கு விருந்தோம்பும் இடமாக விளங்கியது. இதில் பெங்களூரிலிருந்து வந்திருந்த இளைஞர்கள் பலர் CREST-க்கு முதல் முறையாக வந்திருந்தனர். CREST அட்டவணை பங்கேற்பாளர்களை காலை 4:15 மணியிலிருந்து இரவு 10 மணி வரை மும்மரமாக வைத்திருந்தது.

'நம்மை மாற்ற நம் மூலமாக நம் மீது பணியாற்றுதல்' (சகோ. கோபாலன்), 'எல்லையற்ற ஆற்றல் கொண்ட விதைகள்' (சகோ. பத்ரேஷ்) மற்றும் '500 செம்மறி ஆடுகளைக் காட்டிலும் ஒரு சிங்கம் மேலானது' (சகோ.Dr. கிருஷ்ணமூர்த்தி) ஆகிய தலைப்புகளின் மீதான விரிவுரைகள் பங்கேற்பாளர்களை ஊக்குவித்து, சிந்தனைக்கு போதுமான விருந்தளித்தது.

களிமண் உருவடித்தல் மற்றும் புகைப்படம் எடுத்தல் ஆகிய செயல்பாடுகள் அவர்களின் எண்ணங்களை படைப்பாற்றலுடன் வெளிப்படுத்த வைத்து அவர்களின் சூழியலை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் காண வைத்தது. குழுப் பணியும் படைப்பாற்றலும் கவனத்தை ஈர்க்கும் காட்சியாக விளங்கியது!

நூலக நேரத்தின்போது ஒவ்வொரு குழுவிற்கும், பல்வேறு தருணங்களில் மாஸ்டர் குறிப்பிட்ட ஒரு புத்தகம் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவும் அதை வாசித்துவிட்டு, கலந்துரையாடி, மறுநாள் மதியத்திற்குள் ஒரு அறிக்கை தயார் செய்துகொண்டு வரவேண்டியிருந்தது.

உருவாக்கப்பட்டிருந்த பத்து குழுக்களும் தத்தமது புத்தகத்தின் சாரத்தை வெவ்வேறு விதங்களில் எடுத்துரைத்தன. அவர்களுடைய உத்வேகத்தையும் தீவிரமான குழுப் பணியையும் காண நன்றாக இருந்தது. பங்கேற்பாளர்கள் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பிற்கு நன்றியுடன் விளங்கி, அதை முழுவதுமாக பயன்படுத்திக்கொள்ளும் நம்பிக்கையுடன் இருந்தனர்.

## அதலஜ் யோகாசிரமம், அகமதாபாத்

ஜனவரி 6, 2013 அன்று வெவ்வேறு நிறுவனங்களிலிருந்து வந்திருந்த 40 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு 'தியானத்தின் மூலம் வாழ்க்கையில் சமன்பட்டு இருத்தல்' என்ற தலைப்பின் மீதான ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





சகோ.ஜிக்னேஷ் ஷெலத் நடத்திய இரண்டு மணிநேர நிகழ்ச்சியில், ஒரு குழுக்கலந்துரையாடலும், சகஜ மார்க்க முறையைப் பற்றிய அறிமுக உரையும் இருந்தன. இந்நிகழ்ச்சியின் பலன் மிக நன்றாக இருந்தது. அது, மூன்று மாதத்திற்கு ஒரு முறை, இது போன்ற வரவேற்புக் கூட்டம் நடத்துவதற்கு, ஒருங்கிணைப்பாளர்களை ஊக்கப்படுத்தியது.

## இளைஞர்களுக்கான நிகழ்ச்சி, அஹ்மத்நகர்

30-டிசம்பர்-2012 அன்று, 'நிலையான நினைவு' என்ற தலைப்பில், அஹ்மத்நகர் மையத்தில், ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஒரு பஜனும், ஒரு கவிதையும் மாஸ்டரின் மீதான அன்பை வெளிப்படுத்தின. சகோ. தபஸ் குல்கர்னி, 2012ம் ஆண்டின்




மையத்தின் செயற்பாடுகள் பற்றிய விவரங்களை அளித்தார். இதனைத் தொடர்ந்து, பாபூஜி மகராஜ் அவர்களின் போதனைகளைப் புரிந்து கொள்வதற்காகவும், நமது மிஷனின் புத்தகங்களைப் படிப்பதை ஊக்குவிப்பதற்காகவும், 'சத்தியத்தின் குரல்' என்ற புத்தகத்தின் அடிப்படையில், ஒரு வினாடி-வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்கும், சகோதரத்துவம் வளர உதவும் வகையிலும், சகோதரர்கள், சகோதரிகள், குழந்தைகள் என்று மூன்று குழுக்களைக் கொண்டு ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 'நிலையான நினைவு' என்ற தலைப்பில் நடந்த நாடகத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. இதனைத்தொடர்ந்து, வரவிருக்கும் புத்தாண்டை கொண்டாடும் விதத்தில், கேக் வெட்டப்பட்டது.

## வதோதரா

வதோதரா மையத்தைச் சேர்ந்த இளைஞர்கள், ஆசிரம வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு, குடியரசு தினத்தை கொண்டாடினர். இயற்கையை நாம் மதிக்கக் கற்றுக்கொண்டு, அதனை அன்போடு பேணி வள்ர்த்தால் மட்டுமே, இயற்கை நம்முடைய மிகச் சிறந்த நண்பனாகும்.



## பிரிபெக்ட் கூட்டம் - ஷாஜஹான்பூர்

டிசம்பர் இறுதி வாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரிபெக்ட் கூட்டத்தில், 38 பிரிபெக்ட்கள் பங்கேற்றனர். 'பயிற்சியைப் பற்றிய ஆழ்ந்த அறிவு' என்ற நிகழ்ச்சியுடன் இக்கூட்டம் தொடங்கியது. மறுநாள், பங்கேற்பாளர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, கலந்துரையாடுவதற்காக பல்வேறு தலைப்புகள் வழங்கப்பட்டன. அவையாவன:

- ஒரு முன்மாதிரியாக செயல்படுவது எப்படி?
- மையத்தின் பல்வேறு பகுதிகளை, ஆழமாக, தனிப்பட்ட முறையில் உணர்ந்து மதிப்பதை வளர்த்துக் கொள்வது எப்படி?
- எவ்வாறு மாஸ்டருடனான தொடர்புக்கு, அப்யாசிகளை ஊக்குவித்து, தூண்டுதல் அளிப்பது?
- தகுந்த, ஊக்குவிக்கப்பட்ட தன்னார்வலர்களைக் கொண்ட குழுவை எப்படி உருவாக்குவது மற்றும், இணைந்து செயல்படுவதல் மற்றும் சகோதரத்துவத்தை எப்படி மேம்படுத்துவது?
- மையத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கு தொலைநோக்கு திட்டத்தை மேம்படுத்துவது

கலந்துரையாடல், அனுபவங்கள் மற்றும் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்தல் ஆகியவற்றுக்குப் பிறகு அனைத்து பங்கேற்பாளர்களும் தங்களுடைய மையங்களின் குறைபாடுகளை ஏற்றுக்கொண்டு, அவற்றில் சிறந்த மாற்றம் உண்டாக்க முடிவெடுத்துக்கொண்டனர். உள்ளார்ந்த ஆனந்தத்தால் ஒளியேற்றப்பட்டு இருந்த பங்கேற்பாளர்களின் பிரகாசிக்கின்ற முகங்கள், இந்த நிகழ்ச்சி, தெளிவூட்டுவதாகவும், மிக நன்றாக நடத்தப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான சான்றாக இருந்தன.

# புதிய நியமனங்கள்

## மையப் பொறுப்பாளர்

பட்டியாலா, பஞ்சாப் - சகோ. அனில் வசிஷ்ட்

நவ்சாரி, குஜராத் - சகோ. நிதின் நாரண்தாஸ் ஹரியானி

ராஜ்கோட், குஜராத் - சகோ. சதீஷ் பல்வந்த்ரைய் மேத்தா

வாபி, குஜராத் - சகோ. பிரகாஷ் தயாராம் படேல்

த்ரிப்ரயார், கேரளா - சகோ. S. ஜெயகுமார்

வாரணாசி, உ.பி. - சகோதரி மாயா சிங்

விசாகப்பட்டினம், ஆ.பி. - சகோ. கொலசின சப்தமுகுலு

லக்னோ, உ.பி - சகோதரி பிரியதர்ஷினி ஸக்ஸேனா

## மண்டலப் பொறுப்பாளர்

ஒடிஷா - சகோ. கந்தார்பா பெஹெரா

மஹாராஷ்ட்ரா (மேற்கு மற்றும் கோவா) - சகோ. சுபாஷ் வைத்யா

மஹாராஷ்ட்ரா (மத்தியப்பகுதி) - சகோ. அருண்குமார் சௌஹான்

மஹாராஷ்ட்ரா (விதர்பா) - சகோ. ராஜேந்திரன் ரத்தினம்

மத்திய பிரதேசம் (மேற்கு) - சகோ.பிரபாகர் தாஸ்

மத்திய பிரதேசம் (கிழக்கு) - மேஜர் ஜெனரல் A.N. முத்ரே

லக்னௌ, ஆசிரம நிர்வாகி - சகோ. ஓம்பிரகாஷ் குலியா

நிர்வாகி, மலம்புழா ரிட்ரீட் மையம் - சகோ.K. சந்திரசேகரன் நாயர்

# அல்வர் ஆசிரமம், ராஜஸ்தான்

## ஒளி மையம்









"மாஸ்டரை முன்மாதிரியாகக் கொண்டு, உங்கள் நடத்தையை உருவாக்கிக்கொள்ள, நீங்கள் கடும் முயற்சி செய்யவேண்டும். அவர் பணிவுள்ளவராக இருந்தால், நீங்களும் பணிவுடன் இருக்க முயலவேண்டும். பின்பு அது பழக்கத்தில் தன்னடக்கமாகி விடுகிறது. நீங்கள் மிகவும் போற்றி அன்பு செலுத்தும் ஒரு மனிதரைப் பின்பற்றுவதாலேயே, உங்கள் குணங்களை உங்களால் மாற்றிக் கொள்ளமுடிகிறது."

P. ராஜகோபாலாச்சாரி, மே 4, 1990, பிரிபெக்ட் கருத்தரங்கம், சாரிஸ்கர்

ராஜஸ்தானின் சிம்ஹத்வார் என்பப்டும் அல்வர், கண்ணுக்கினிய ஆராவலி மலையில் அமைந்துள்ளது. டெல்லிக்குத் தெற்கே 160 கி.மீ. தொலைவிலும், ஜெய்ப்பூருக்கு வடக்கே 150 கி.மீ. தொலைவிலும் இது அமைந்துள்ளது. அல்வர், தனது வளம் செறிந்த ஆன்மீகப் பாரம்பரியத்திற்குப் பெயர்போனது. 1989ம் ஆண்டு, சகோதர் கோகுல் கோஸ்வாமிக்கு, அவ்விடத்திற்கு வேலை மாற்றம் செய்யப்பட்டபோது, அல்வர் மையம் உருவானது. அதனைத் தொடர்ந்து, சகோ. J.P. துபேயும் அவரது மனைவியும் அப்யாசிகள் ஆனார்கள். சில வருடங்களுக்கு சகோ. துபேயின் இல்லத்தில் சத்சங்கம் தொடர்ந்து நடந்தது. 1996ம் ஆண்டு, சகோ. துபே, பிரிபெக்ட் ஆக்கப்பட்டார். அப்யாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் துவங்கியவுடன், ஞாயிறு சத்சங்கம் ஒரு பள்ளிக்கு மாற்றப்பட்டது.

ராஜஸ்தான் மாநில நெடுஞ்சாலையில், முழுவதுமாக வளர்ச்சியடைந்துள்ள, அம்பேத்கர் நகர் எனப்படும் குடியிருப்பு வளாகம் ஒன்றில் ஆசிரமம் அமைந்துள்ளது. நகரின் கிழக்குப்புறத்தில், ரயில் நிலையத்திலிருந்து 0.4 கி.மீ. தூரத்திலும், பேருந்து நிலையத்திலிருந்து 0.6 கி. மீ. தூரத்திலும் உள்ளது.

1990ம் ஆண்டு மே 3ம் தேதியிலிருந்து 5ம் தேதிவரை, சாரிஸ்கர் பாலஸ் ஹோட்டலில் நடைபெற்ற பன்னாட்டு பிரிசெப்டர்கள் கருத்தரங்கில் கலந்து கொள்ள முதல் முறையாக மாஸ்டர் அல்வருக்கு வருகை புரிந்தார்.

இரண்டாம் முறையாக, 1999ம் ஆண்டு அக்டோபர் 19 மற்றும் 20தேதிகளில் நடைபெற்ற மாநில அளவிலான நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்தார். அவரது வருகைகளால், மையம் நன்கு வளர்ச்சிபெற்றது. தற்சமயம், முறையாகப்பங்கேற்கும் சுமார் 300 அப்யாசிகள் உள்ளனர்.

மாநில அரசாங்கம், U.I.T (அல்வர்) மூலம், 99 வருடங்களுக்கான குத்தகையின் அடிப்படையில், 2051 சதுர மீட்டர் அளவுள்ள நிலத்தை வழங்கியுள்ளது. குத்தகை உரிமைப் பத்திரம், 2007 நவம்பர் 1ம் தேதி, SRCM செயலாளர் சகோ. உமா சங்கர் அவர்களால் பதிவுசெய்யப் பட்டது.

மாஸ்டர், 2010, ஜனவரி 28 ம் தேதி யன்று, துவக்கவிழா கல்வெட்டைத் திறந்து வைத்து, அவ்விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த சுமார் 500அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். அது முதல் அன்புடனும், அர்ப்பணிப்புடனும் பல்வேறு நிகழ்ச்சிகள், இங்கு கொண்டாடப்பட்டு வருகின்றன. அல்வர் மைய அப்யாசிகள் மட்டுமின்றி, அருகிலிருக்கும் ராஜ்கர், கைர்தல், கொட்புட்லி, பண்டிகுய், மாஹ்வா, மற்றும் பில்வா ஆகிய மையங்களின் அப்யாசிகளும் அந்நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

எல்லாப் பக்கங்களிலும் எல்லைச்சுவர், 26*76 அளவிலான ஒரு தியான மண்டபம், அதனருகில் மாஸ்டரின் அலுவலக அறை, சமையலறை, காப்பாளரின் அறை, கழிப்பறைகள், குளிப்பறைகள், ஒரு ஆழ் துளைக் கிணறு மற்றும் 2 HP சக்திவாய்ந்த நீருள் அமைக்கப்பட்ட பம்பு, ஆகியவை இதுவரையிலும் முடிக்கப்பட்டுள்ளன. ஆசிரம வளாகத்தில் உள்ளும், வெளியிலும் உருவாக்கப்பட்டுள்ள, பூச்செடிகளும், மரங்களும் கொண்ட அழகான புல்வெளி, கண்ணுக்கினிய தோற்றத்தை அளிக்கிறது. 50*70 ச. அடி பரப்புள்ள தியான மண்டபம் ஒன்று வருங்காலத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**
© 2013 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.